මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: LAE/2025/87** **2025.05.03**

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025 மே 06

## அரச மற்றும் தனியார் வங்கிகளில் பணிபுரியும் பணியாட்குழுவினருக்கு வாக்களிப்பதை இயலச் செய்யும் விதத்தில் லீவு வழங்குதல்

அரச மற்றும் தனியார் துறையில் பணிபுரிவோருக்கு, வாக்கெடுப்புகளின் போது சம்பளக் குறைப்பற்றதாக அல்லது சொந்த லீவு குறைப்பற்றதாக வாக்களிப்பதை இயலச்செய்யும் விதத்தில் லீவு வழங்குதல் சம்பந்தமாக தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிப்பட்ட 2025.04.25 ஆம் திகதிய, LAE/2025/71 மற்றும் LAE/2025/72 ஆம் இலக்க ஊடக அறிவித்தல்கள் மீது மீண்டும் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

வாக்களிப்பதை இயலச்செய்யும் விதத்தில் தொழில்களில் ஈடுபடுவோருக்கு லீவு வழங்க தொழில்தருநர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் (262 ஆம் அதிகாரம்) 84அ பிரிவுக்கு அமைய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், 2025.05.06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலின் போதும் உரிய முறையில் அதனை அமுல்படுத்த வேண்டியுள்ளது.

தொழில்தருநர்கள் அனைவரும் இது சம்பந்தமாக ஊடகங்கள் வாயிலாக அறிவுறுத்தப்பட்டுள்ள போதும், சில வங்கிகளில் ஊழியர்களுக்கு உரிய முறையில் விடுமுறை வழங்கப்படுவதில்லை என்று தேர்தல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அதன்படி, அனைத்து அரச மற்றும் தனியார் வங்கிகளிலும் பணிபுரியும் தமது பணியாட்குழுவினருக்கு இத்தேர்தலின் போது வாக்களிப்பதை இயலச் செய்யும் விதத்தில் லீவு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இத்தால் கோரப்படுகின்றது.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்